

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கு குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து : சீனாவில் உள்ள திருஅவை நற்செய்தியில் அதன் விசுவாசத்தை நிலைநிறுத்தி ஒற்றுமையில் வளர மன்றாடுவோம்.**
**மார்ச் மாத கரு : கடவுள் உங்களுக்குள் தயவை கண்டடைந்துள்ளார்.**

பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மார்ச் 8 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | தவக்கால 2ஆம் ஞாயிறு<br>தவக்கால 2ஆம் ஞாயிறு<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| மார்ச் 9 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 10 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 11 புதன் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 12 வியா | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 13 வெள் | மாலை 7.30 | சிலுவைப்பாதை(த, ஆ)/திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 14 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 15 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | தவக்கால 3ஆம் ஞாயிறு<br>தவக்கால 3ஆம் ஞாயிறு- முதலாம் சடங்கு |

பங்கு நடவடிக்கைகள்

| **மார்ச் 8 ~ 14** | **மாலை 7.30** | **புலூமாதே** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| மார்ச் 8 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>காலை 10.30<br>மாலை 5.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பங்கு மண்டபம்<br>பெர். மையம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>பாலர் வகுப்பு மாணவர்களின் விளையாட்டுகள்<br>அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம் |
| மார்ச் 9 திங் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-3 | RCIA வேட்பாளர்கள் & ஆதரவாளர்கள் ஒத்திகை<br>சீடத்துவம் (த) |
| மார்ச் 10 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| மார்ச் 12 வியா | மாலை 7.45<br>மாலை 8.00 | பெர். மை 2-2<br>பெர். மை 1-1 | RCIA (ஆ)<br>சிலுவையில் 7 வார்த்தைகள் செப வழிபாடு (தமிழ்) |
| மார்ச் 13 வெள் | மாலை 8.00 | புபிஅ சிற்றாலயம் | சிலுவை பாதை (த, ஆ) |
| மார்ச் 14 சனி | காலை 10.00<br>மாலை 4.30<br>மாலை 5.30 | ஆலயம்<br>ஆலயம்<br>ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர் & ஞானப்பெற்றோர்)<br>குழந்தைகள் திருமுழுக்கு<br>செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| **15 & 22 மார்ச் 2020 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 29 மார்ச் 2020 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.** | | | |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **மறைக்கல்வி மாணவர்களுக்கான பொது பாவசங்கீர்த்தனம்: படிவம் 1 முதல் படிவம் 5 வரையிலான மறைக்கல்வி மாணவர்களுக்கு 8 மார்ச் 2020 @** காலை 10.30 ~ 11.00 வரை ஆலயத்தில் **பொது பாவ நீக்க சடங்கு** நடைபெறும்.
2. **பங்கில் கூட்டங்கள்/ ஒன்றுகூடுதல்கள்:** கோவிட் -19 நச்சுயிரியால் நான் அனைத்து பணிக்குழுக்களிடமும் கூட்டங்களை குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவசியம் என்றால் மட்டுமே கூட்டங்களை நடத்துங்கள். தயவு செய்து தேவையற்ற ஒன்றுகூடுதல்களை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
3. **மறைக்கல்வி மாணவர்கள் பங்கு பணிக்குழுக்களில் பங்கேற்பதற்கான பதிவு (வகுப்பு 5 ~ படிவம் 5):** பெற்றோர் சந்திப்பு நேரத்தின்போது உங்கள் பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமான பணிக்குழுக்களில் பங்கேற்க பெற்றோர்களே உங்களிடம் வழங்கப்பட்ட பதிவு பாரங்களை சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியர்களிடம் **8/3/2020 (ஞாயிறு)**க்குள் சமர்ப்பிக்க நினைவுறுத்தப்படுகிறீர்கள். பாரங்களை உங்கள் பிள்ளைகள் வழியாக கொடுத்து அனுப்புங்கள். இதன் முக்கிய நோக்கம் நமது பிள்ளைகளை **இன்றும்** எதிர்வரும் விசுவாச வாழ்விலும் சேவை நோக்குடையவர்களாயும், அர்ப்பணிப்புள்ள தலைவர்களாயும் ஆக வேண்டுமென்பதே.
4. **அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 8 மார்ச் 2020 (ஞாயிறு) மாலை 5.00 ~ 7.00 @ பெர். மையத்தில் நடைபெறும்.

**5. திருஉருவசிலைகள்:** உங்களிடம் திருஉருவசிலைகள் நிறங்கள் மங்கிய நிலையில் உள்ளனவா? உடைந்த திருஉருவசிலைகளை பழுதுபார்க்க வேண்டுமா? புனித ரூபஸ் அதிச அவர்களின் 2020 நிதி திரட்டும் திட்டமாக திருஉருவசிலைகளை பழுதுபார்த்து அதிலிருந்து கிடைக்கும் பணம் அனைத்தும் ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பிற்கு சேரும். உங்கள் திருஉருவசிலைகளையும், உங்களின் விவரங்களையும் பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும். முடிந்தபிறகு (ஒரு மாதத்திற்குள்) பழுதுபார்ப்பிற்கான நிபந்தனை தொகையை செலுத்திவிட்டு திருஉருவசிலைகளை பெற்றுக்கொள்ளவும்.

**6. பினாங்கு மறைமாவட்டத்தில் ஒப்புரவு அருள்சாதன சடங்கு *உடனடியாக இடைநீக்கம் செய்யப்படுகிறது*:** சமீப காலமாக மலேசியாவில் கோவிட்- 19 நச்சுயிரியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதி விரைவாக அதிகரித்து வருகிறது. மலேசிய சுகாதார அமைச்சு 4 மார்ச் 2020இல் 14 பேர் புதிதாக கோவிட் - 19ஆல் பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதனால் மலேசியாவில் மொத்தம் 50 பேர் இந்நோயால் பாதிப்புக்குள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பினாங்கு மறைமாவட்டம் கோவிட்- 19 நமது பங்குகளுக்குள்ளும், சமுதாயத்திலும், மனிதரிடமிருந்து மனிதருக்கு தொற்றுவதை, கட்டுப்படுத்த முயற்சிகளை தொடங்கியுள்ளது. இதனையொட்டி, **இந்த தவக்காலத்தின்போது எல்லா ஒப்புரவு அருள்சாதன சடங்குகளும் உடனடியாக இடைநீக்கம் செய்யப்படுகின்றன.** இந்த கடுமையான, அவசர தேவையை முன்னிட்டு, பினாங்கு ஆயர் பேரருள் செபஸ்தியன் பிரான்சிஸ், தவக்கால 4 & 5ஆம் ஞாயிறு அனைவருக்கும் திருப்பலி கொண்டாடும் குருவானவர் **பொது பாவ நீக்கம்** வழங்குவார் என தீர்மானித்துள்ளார். எல்லா பங்குகளும், குருவானவர்களும், பங்கு மக்களும் நமது சமூகத்தினரிடையே, சாத்தியமான, மிகவும் முக்கியமாக எந்தவொரு தொற்றும் பரவுவதைக் குறைக்க தேவையான தடுப்பு முயற்சிகளை எடுக்க கேட்டுக்கொள்கிறார். நல்ல தடுப்பு நெறிமுறைகளை ஒரு பொதுச் சேவையாக தூண்டிவிட பின்வரும் வழிமுறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- எந்தவொரு நபரும் உடல் நலமற்றிருந்தாலோ அல்லது காய்ச்சலின் அறிகுறிகள் இருந்தாலோ உடல் நலம் சரியாகும் வரையில் தன்னார்வ முறையில் வீட்டில் தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தயவு செய்து திருப்பலிகளுக்கோ, கூட்டங்களுக்கோ, அல்லது நட்புறவு விருந்திலோ கலந்து கொள்வதை தவிர்த்து விடுங்கள்.
- கைகளை அடிக்கடி கழுவுங்கள். எல்லா நேரங்களிலும் முறையான கை சுகாதாரத்தை பேணுங்கள்.
- சீனா, கொரியா, ஜப்பான், இத்தாலி மற்றும் ஈரானிலிருந்து சமீபத்தில் நாடு திரும்பிய எல்லா நபர்களும் மலேசிய சுகாதார அமைச்சு வழங்கிய ஆலோசனைப்படி 14 நாள்களுக்கு தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகிறது.

மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றுவது கோவிட்-19 பரவுவதை தடுக்கும் நோக்கத்தை வெற்றிபெறச் செய்யும் என எதிர்பார்க்கிறோம். இந்த நச்சுயிரி பரவுவதைக் கட்டுப்படுத்த முழு உலக சமுதாயமே போராடி வரும் இவ்வேளையில் நமது சக மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும், நல்வாழ்வுக்கும் திருஅவை எப்பொழுதும் இறைவேண்டல், நம்பிக்கை, மரியாதை போன்ற பண்புகளை கடைப்பிடித்து வருகிறது.

**7. அவே சிற்றாலய ஒப்பந்த அறிவிப்பு:** திரு. டோமினிக் செல்வம், திரு. ரோபர்ட் ஜோன், திரு. சேவியர், திருத்தொண்டர் சந்தனசாமி, அருள் தந்தை ரோபர்ட் டேனியல், ஆலோசகரான கட்டிட வடிவமைப்பாளர் டிங் போய் கூய் ஆகியோர் அடங்கிய ஒப்பந்த செயல்குழு, அவே சிற்றாலயம் கட்டியெழுப்ப Greatchain Construction Sdn. Bhd. நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். செலவு ரிம 1.2 மில்லியன் (கட்டிடம் மட்டும்). ஆயர் செபஸ்தியன் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார். 15 மார்ச் 2020 (ஞாயிறு) மாலை 5.30க்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நில உடைப்பு நிகழ்வு நடைபெறும். நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த கனவு நனவாவதைக் காண பங்கு மக்களை அழைக்கிறோம்.

**8. தவக்கால பிரச்சாரம் 2020 நிகழ்வுகள் – கருத்து குணமடைய அனுப்பப்படுதல்:** ஆவியால் நொறுக்கப்பட்டதை உயர்த்துங்கள் – 8 மார்ச் 2020 (குடியேற்றவாசிகள் பணிக்குழு). அகதிகள் பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தேவைப்படுவோரிடம் பெருந்தன்மையுடனும் நடந்துக்கொள்ளவும்.

**9. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** நாள்: 14 மார்ச் 2020 (சனி), நேரம்: மாலை 4.30. மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**புலூமா ஏழைகளுக்கான உணவு (2009ல் நிறுவப்பட்டது):** உணவு திட்டம்: புதன்/ வியா மதியம் 12.45 ~ 1.45 வரை First Garden மெதுவோட்ட பாதை (Jogging Track) பெகோர் அடுக்குமாடி வீடு அருகில் செயல்படுகிறது.

**நம்பிக்கை மையம்**: நம்பிக்கை மையம் ஞாயிறு காலை 10.30 ~ மதியம் 12.00 மற்றும் செவ்வாய் & வியா காலை 10.30 ~ மதியம் 12.00/ மாலை 5.30 ~ மாலை 7.00 வரை திறந்திருக்கும்.

**நிதி பொறுப்புடைமை:** பங்கு குருவானவரிடமிருந்து எழுத்துபூர்வமான அனுமதி இல்லாமல் ஏதேனும் நிதி உதவி பெற யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. என் பெயரை பயன்படுத்தி யாரேனும் பணம் கேட்டால் அவர்களை பொறுட்படுத்தாதீர்கள். இம்மாதிரியான எந்த வித நிதி மோசடிக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன். இம்மாதிரியான பிரச்சனைகள் இருந்தால் உடனடியாக என்னையோ/ பங்கு அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அனைத்து நன்கொடைகளும் பங்கு அதிகாரப்பூர்வமான ரசீதுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சிற்றாலயம் மற்றும் பங்கு நிதி பிப்ரவரி 2020 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - ரிம 486,711.28
அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - ரிம 561,392.22 ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு - ரிம 488,732.05
(மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**1/03/20 திருப்பலி வசூல்கள்:** காலை 7.00 - RM 999.10 காலை 9.00 - RM 1,518.45 முனிசிபல் – RM 223.10
மொத்தம்- RM 2,740.65 **2019** - RM 30.00 **2020** - RM 1,180.00 கல்லறை- RM 2,746.75
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்